# HOLY TRINITY INTERNATIONAL SCHOOL

**Melpalai, Edaicode Post, K.K. District.**

**GRADE –VII**

**TAMIL**

## இயல் -1 எங்கள் தமிழ்

கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களின் விடைகளை நன்றாகப் படித்து எழுதி பழகுக.

**அருள்நெறி அறிவைத் தரலாகும்**
**அதுவே தமிழன் குரலாகும்**
**பொருள்பெற யாரையும் புகழாது**
**போற்றா தாரையும் இகழாது**
**கொல்லா விரதம் குறியாகக்**
**கொள்கை பொய்யா நெறியாக.**

**வினாக்கள்:**

1. நெறி என்னும் சொல்லின் பொருள் எழுதுக.

அ.வழி ஆ.குறிக்கோள் இ.கொள்கை ஈ.அறம்

விடை:அ.வழி

2. குரலாகும் என்னும் சொல்லைப் பிரித்த எழுதக்கிடைப்பது எது?

அ.குரல் + யாகும் ஆ.குரல் +ஆகும் இ.குர +லாகும் ஈ.குர +ஆகும்

விடை :ஆ.குரல் +ஆகும்

3. தமிழ்மொழி எவ்வறிவைத்தருமொழி?

அ.அருள்நெறி ஆ.பொருள்நெறி இ.மருள்நெறி ஈ.இருள்நெறி

விடை :அ.அருள்நெறி

4. தமிழ்மொழியின் குறிக்கோளாய் விளங்குவது எது?

அ.கள்ளுண்ணாமை ஆ.பொய்பேசாமை இ.கொல்லாமை ஈ.சிற்றினம் சேராமை

விடை :இ.கொல்லாமை

5. தமிழ்மொழி கொள்கையென வழங்குவது எது?

அ.நீதி வழுவாமை ஆ.சிறியன சிந்தியாமை இ.அறம் தவறாமை ஈ.பொய்யுரையாமை

விடை :ஈ.பொய்யுரையாமை

**குறுவினாக்கள்**

1. தமிழ்மொழியன் பண்புகளாய் நாமக்கல் கவிஞர் கூறுவன யாவை?

தமிழ்மொழியில் அமைந்த நூல்கள் எல்லா உயிரினங்களையும் ஒன்று என் கருதும். அருள்வழியல் செல்வதற்கான அறிவுப்பாதையை விளக்கிக் காட்டும். அந்த அருள்நெறியே தமிழனின் இலட்சியமாய் ஒலிக்கும்.

2. தமிழ்மொழியைக் கற்றவரின் இயல்புகளை எழுதுக.

தமிழ்ப்புலவர்கள் பொருள் ஒன்றனையே நோக்கமாய்க் கொண்டு எவரையும் புகழ்ந்து பாடமாட்டார்கள். தம் தகுதி அறிந்து பொருளை ஈயாவிட்டாலும் அவரைத்தூற்றிப் பாட மாட்டார்கள்.

3. நாமக்கல்லார் எழுதிய நூல்கள் நான்கினைக் குறிப்பிடுக.

தமிழன் இதயம், சங்கொலி, அவளும்அவனும், என் கதை முதலிய நூல்கள் நாமக்கல் கவிஞர் எழுதிய நூல்களாகும்.

**சிறுவினா**

1. கவிஞர் தமிழை ஏன் தேனுடன் ஒப்பிடுகிறார்?

❖ தேன் இனிமையானது. திகட்டாது. அதுபோலத் தமிழும் பயிலப்பயில இனிமைத் தரும். திகட்டாதிருக்கும்.

❖ தேன் உடலுக்கு மருந்தாய் அமைந்து நோயைப் போக்கி உயிரைக் காக்கும்.அதுபோத்தமிழ் அறியாமையை அகற்றி அறிவைப் பெருக்கும்.

❖ எனவே தமிழைத் தேனுடன் கவிஞர் ஒப்பிடுகிறார்.

**நெடுவினா**

1. எங்கள் தமிழ் என்னும் பாடலில் நாமக்கல் கவிஞர் கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

❖ ஒலி எழுப்பிக்கொண்டு இன்பம் தரும் மழை, வானிலிருந்து பொழியும். அதுபோல இனிய ஓசையுடன் மக்கள் வாயிலிருந்து ஒலிக்கின்றது, தேன் போன்ற தமிழ்.

❖ அன்பு ,அறநெறி ஆகியவற்றைப் பின்பற்றி நடக்கத் தமிழ், ஊக்கம் தரும்; அச்சத்தை அடியோடு அகற்றும்.

❖ தமிழ்நூல்கள் அருள்வழியில் செல்வதற்கான அறிவுப் பாதையைக் காட்டும்.

❖ தமிழ்ப்புலவர்கள் பொருளுக்காக எவரையும் புகழ்ந்து பாடார் பொருள் கொடுக்காதவரைத் தூற்றவும் மாட்டார்.

❖ கொல்லாமையே தமிழனின் நோன்பும் இலட்சியமுமாகும்.

❖ கொள்கையிலிருந்து நழுவாது தமிழர்கள் நேரிய பாதையில் செல்வர்.

❖ தம்மைப்போலப் பிறரும் அன்பு வழியில் சென்று இன்புற்று வாழத் தமிழர் விரும்புவர்.

**2.ஒன்றல்ல இரண்டல்ல**

**முல்லைக்குத் தேர்கொடுத்தான் வேள்பாரி – வான்**
**முகிலினும் புகழ்படைத்த உபகாரி - கவிச்**
**சொல்லுக்குத் தலைகொடுத்தான் அருள்மீறி - இந்த**
**வள்ளலாம் குமணன்போல் வாழ்ந்தவர் வரலாறு.**
**(ஒன்றல்ல இரண்டல்ல தம்பி)**

**வினாக்கள்:**

1. வான்முகிலின் புகழ் படைத்த உபகாரி யார்?

அ.காரி ஆ.ஓரி இ.பாரி ஈ.பேகன்

விடை: இ.பாரி

2. கவிச்சொல்லுக்கு எதைக் கொடுத்தான் குமணவள்ளல்.

அ.அ.கண் ஆ.காது இ.கை ஈ.தலை

விடை: ஈ.தலை

3. வானில் எக்கூட்டம் திரண்டால் மழைபொழியும்

அ.அகில் ஆ.முகில் இ.துகில் ஈ.துயில்

விடை :ஆ.முகில்

4. உபகாரி என்னும் சொல்லின் பொருள் எழுதுக.

அ.துயில் ஆ.வள்ளல் இ.விந்தை ஈ.போர்வை

விடை :ஆ.வள்ளல்

5. 'இரண்டல்ல' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது எது?

அ.இரண்டு + டல்ல ஆ.இரண் +அல்ல

இ.இரண்டு + இல்ல ஈ.இரண்டு + அல்ல

விடை :ஈ.இரண்டு + அல்ல

**குறுவினாக்கள்**

1. தமிழ்நாட்டின் இயற்கை வளங்களாய்க் கவிஞர் கூறுவன யாவை?

**தமிழ்நாட்டின் இயற்கை வளங்களாய்க் கவிஞர் கூறுவன:**

- வீசும் தென்றலில் இன்சுவைத் தேனின் மணம் கமழும்.
- நன்செய் நிலத்தில் கனிந்த பழங்களும் பொன் போன்று செந்நிறங் கொண்ட தானியக் கதிர்களும் விளைந்திருக்கும்.

2. 'ஒன்றல்ல இரண்டல்ல' - இப்பாடலில் இடம் பெற்றுள்ள வள்ளல்கள் குறித்த செய்திகளை எழுதுக.

- பற்றிப் படர்வதற்குக் கொழுகொழுப்பின்றி வாடிய முல்லைக் கொடியினுக்குப் படர்வதற்குத் தன் ஏறிவந்த தேரினையே கொடுத்தான் வள்ளல் பாரி.
- தன் தலையை வெட்டிச் சென்று தன் தம்பியிடம் கொடுத்துப் பொருள் பெறுமாறு கூறித் தன் உடைவாளைப் புலவரிடம் கொடுத்தான். குமணவள்ளல்.

3. 'ஒன்றல்ல இரண்டல்ல' –என்னும் கவிதை மூலம் கவிஞர் எவற்றை எடுத்துரைக்கின்றார்?

'ஒன்றல்ல இரண்டல்ல' என்னும் பாடல்வழி கவிஞர் தமிழ்நாட்டின் இயற்கைவளம்,கலைவளம், பண்பாட்டுவளம் ஆகியவற்றை எடுத்துக் கூறுகிறார்.

**சிறுவினா**

1. தமிழுக்கு வளம் சேர்க்கும் இலக்கிய வகைகளாய்க் கவிஞர் கூறுவன யாவை?

**தமிழுக்கு வளம் சேர்க்கும் இலக்கிய வகைகளாய்க் கவிஞர் கூறுவன:**

- ❖ ஆயிரம் யானைகளைப் போர்க்களத்தில் கொன்ற பெருவீரனது வெற்றியினைச் சிறப்பித்துப் பாடும் நூல் பரணியாகும்.
- ❖ வளமான கருத்துக்களையும் நயங்களையும் கொண்டவை பரிபாடல், கலம்பகம் ,எட்டுத்தொகை ஆகிய நூல்களாகும்.
- ❖ வானளவு புகழ்பெற்று விளங்குவது திருக்குறள்.
- ❖ சிறந்த அகப்பொருளையும் புறப்பொருளையும் எடுத்துக் கூறுபவை அகமாய் புறஅமைந்த சங்க இலக்கியநூல்கள்.
- ❖ இத்தகைய இலக்கியப்பெருஞ்செல்வங்களைக் கொண்டது தமிழ்மொழி.

4. 3.

**நெடுவினா**

1. தமிழில் அற இலக்கியங்கள் மிகுதியத்தோன்றக் காரணம் என்ன?

- ❖ தமிழர்கள் அடிப்படையில் அறச்சிந்தனை மிகுந்தவர்கள்.
- ❖ வாழ்க்கையை எப்படி வாழவேண்டும் என்ற நெறியும் உறுதியும் உடையவர்கள்.
- ❖ எனவே சமூகம் அந்த உயர் நெறிகளிலிருந்து சிறிது வழுவினாலும் அறத்தை வற்புறுத்தத் தயங்கமாட்டார்கள்.
- ❖ அறத்தை இடையறாது போதிப்பதன் வாயிலாகச் சமூகத்தின் நினைவுகளில் அவற்றை நிறுத்தும் ஓர் உத்தி வகையாகவே அற இலக்கியங்களைத் தமிழர்கள் படைத்தனர்.
- ❖ ஒவ்வொரு பிரிவுனருக்குமான அறங்கள் ஒவ்வொரு துறைக்குமான அறங்கள் ஒவ்வொரு காலத்துக்குமான அறங்கள் என அறங்களைத் தொடர்ச்சியாகப் பேசி வருபவர்கள் தமிழர்கள்.
- ❖ எனவேதான் சங்க இலக்கிய காலத்திலிருந்து தற்காலம் வரை அற இலக்கியங்கள் பல்வேறு வகைகளிலும் வடிவங்களிலும் படைக்கப்படுகின்றன.
- ❖ அற இலக்கியங்கள் தமிழில் மிகுதியாய்த் தோன்றியமைக்கு இவையே காரணங்கள் ஆகும்.

**பேச்சுமொழியும் எழுத்து மொழியும்**

வாயினால் பேசப்பட்டுப் பிறரால் கேட்டு உணரப்படுவது பேச்சுமொழியாகும். இவ்வாறு பேசுவதும் கேட்பதும் மொழியின் முதல்நிலை. வரிவடிவில் அமையும் எழுத்து மொழியானது நீண்டகாலப் பயன்பாட்டிற்கு உரியது. ஒலிவடிவில் அமையும் பேச்சுமொழியானது உடனடிப்பயன்பாட்டிற்கு உரியது. பேச்சுமொழியை உலக வழக்கு என்றும் கூறுவர். ஒலியின் வரிவடிவம் எழுத்து மொழியாகும். ஒருமொழி உயிர்ப்போடு வாழ்வதற்குப் பேச்சுமொழியே பயன்படுகிறது. பருவ இதழ்களில் இன்றும் பயன்படும் மொழி பேச்சுமொழி ஆகும். ஒரு தொடரில் எந்த சொல்லுக்கு அழுத்தம் கொடுக்கிறோமோ அதற்கேற்பப் பேச்சுமொழியில் பொருளும் வேறுபடும்.

1. மொழியின் முதல்நிலை பேசுதல் என்பது எது?

அ.படித்தல் ஆ.கேட்டல் இ.எழுதுதல் ஈ.வரைதல்

விடை: ஆ.கேட்டல்

2. ஒலியின் வரிவடிவம் எம்மொழியைக்குறிப்பிடும்?

அ.பேச்சு ஆ.எழுத்து இ.குரல் ஈ.பாட்டு

3. பேச்சுமொழியை வேறு எவ்வாறு வழங்குவர்?

அ.உலகவழக்கு ஆ.இலக்கியவழக்கு இ.நூல்வழக்கு ஈ.மொழிவழக்கு

விடை :அ.உலகவழக்கு

4. ஒருமொழி உயிர்ப்போடு வாழ்வதற்கு எது பயன்படுகிறது?

அ.எழுத்துமொழி ஆ.பேச்சுமொழி இ.பிறமொழி ஈ.கிளைமொழி

விடை : ஆ.பேச்சுமொழி

5. பருவ இதழ்களில் இன்றும் பயன்படும் மொழி எது?

அ.கலப்புத்தமிழ் ஆ.எழுத்துத்தமிழ் இ.கலப்புத்தமிழ்

ஈ.வட்டாரத்தமிழ்

விடை:ஆ.எழுத்துத்தமிழ்

6. எழுத்துமொழியானது எப்பயன்பாட்டிற்குரியது.

அ.குறுகிய காலப் ஆ.இடைகாலப் இ.நீண்டகாலப்

ஈ.எதிர்காலப்

விடை :இ.நீண்டகாலப்

**குறுவினா**

1. மொழியின் இருவடிவங்கள் யாவை?

மோழியின் இருவடிவங்கள் பேச்சுமொழி எழுத்துமொழி என்பன ஆகும்.

2. பேச்சுமொழி என்றால் என்றால் என்ன?

வுாயினால் பேசப்பட்டுப் பிறரால் கேட்டு உணரப்படுவது பேச்சுமொழி ஆகும்.

3. வட்டாரமொழி எனப்படுவது யாது?

பேச்சுமொழி இடத்திற்கு இடம் மாறுபடும். மனிதர்களின் வாழ்வியல் சூழலுக்கு ஏற்பவும் மாறுபடும். இவ்வாறு மாறுபடும் ஒரு மொழியின் வெற்வேறு வடிவங்களே வட்டாரமொழி எனப்படும்.

**சிறுவினா**

1. பேச்சுமொழிக்கும் எழுத்துமொழிக்கும் இடையே உள்ள வேறுபாடுகளுள் நான்கனை எழுதுக.

**பேச்சுமொழி**

1. பேச்சுமொழி வழக்குமொழியாகும்.
2. சொற்டகள் பெரும்பாலும் குறுகி ஒலிக்கும்.
3. உணர்ச்சிக் கூறுகளை அதிகம் கொண்டது.
4. காலத்திற்கு ஏற்ப மாற்றம் அடைவது.

**எழுத்துமொழி**

1. இலக்கிய வழக்கு மொழியாகும்.
2. சொற்கள் முழுமையாய் எழுதப்படும்.
3. உணர்ச்சிக் கூறுகளைக் குறைவாய்க் கொண்டது.
4. எப்பொழுதும் நிலைத்த தன்மை உடையது.

**1.** இலக்கியங்கள் காலம் கடந்தும் அழியாமல் வாழ்வதற்கு என்ன காரணம் என்று கருதுகிறீர்கள்?

- ❖ இலக்கியங்கள் காலம் கடந்து அழயாமல் இருப்பதற்கு முக்கிய காரணம் அவை எழுத்து வடிவில் இருப்பதனாலே ஆகும்.
- ❖ நேரில் காண இயலாத நிலையில் செய்தியைத் தெரிவிக்க எழுத்துமொழி உதவுகிறது.
- ❖ மனிதர்களின் சிந்தனைகள் காலம் கடந்து வாழ்வதற்கும் எழுத்துமொழியே காரணமாகின்றது.
- ❖ ஒலிவடிவில் அமையும் பேச்சுமொழியானது உடனடிப் பயன் பாட்டிற்கு உரியது.

- ❖ வரிவடிவில் அமையும் எழுத்துமொழியானது நீண்டகாலப் பயன்பாட்டிற்கும் உரியது.
- ❖ பேச்சுமொழிக்கு நாம் தந்த வரிவடிவமெ எழுத்துமொழியாகும்.
- ❖ ஒரு மொழியானது நீண்டகாலம் நிலைபெறுவதற்கு எழுத்து வடிவம் இன்றியமையாதது.பல நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட இலக்கியங்கள்எழுத்து வடிவில் இருப்பதால்தான் நம்மால் இன்றும் படிக்க முடிகிறது. எழுத்துக்களில் காலம் இடம் ஆகியவற்றுக்குஏற்பசொற்கள் சிதைவதில்லை. ஆனால் வரிவடிவம் மாறுபடும்.

## குற்றியலுகரம் குற்றியலிகரம்

1. குற்றியலிகரத்தில் வரும் இகரம் தனக்குரிய ஒரு மாத்திரையளவிலிருந்து குறைந்து ஒலிக்குமாயின் எம்மாத்திரை அளவு ஒலிக்கும்.
அ.அரை ஆ.ஒன்று இ.இரண்டு ஈ.ஒன்றரை
விடை :அ.அரை

2. கேண்மியா, சென்மியா ஆகியவற்றில் உள்ள மியா என்னும் முன்னிலை அசைச்சொல்லில் உள்ள .......................தன் மாத்திரையிலிருந்து குறைந்து ஒலிக்கும்.
அ.இகரம் ஆ.உகரம் இ.தனிக்குறில் ஈ.ஔகாரம்
விடை :அ.இகரம்

3. தனக்குரிய ஒரு மாத்திரை அளவிலிருந்து குறையாத உகரம் எது?
அ.முற்றியலுகரம் ஆ.குற்றியலுகரம் இ.வல்லின உகரம்
ஈ.குற்றியலிகரம்
விடை :அ.முற்றியலுகரம்

4. தனிக்குறில் எழுத்தை அடுத்து ஈற்றில் வரும் உகரம் எது?
அ.முற்றியலுகரம் ஆ.குற்றியலுகரம் இ.வல்லின உகரம்
ஈ.குற்றியலிகரம்
விடை : இ.வல்லின உகரம்

5. குற்றியலுகரம் எத்தனை வகைப்படும்?
அ.ஆறு ஆ.ஏழு இ.பத்து ஈ.இரண்டு
விடை :அ.ஆறு

6. மெய் எழுத்துக்களை எத்தனை மாத்திரை கால அளவில் ஒலிக்க வேண்டும்?
அ.அரை ஆ.ஒன்று இ.இரண்டு ஈ.ஒன்றரை
விடை :அ.அரை

7. இன்றைய தமிழில் மொழிக்கு முதலில் வராத குற்றியலுகரச்சொல் எது?
அ.பந்து ஆ.வறுமை இ.நுந்தை ஈ.குழந்தை
விடை :இ.நுந்தை

8. நெடில்தொடர்க்குற்றியலுகரம் எத்தனை எழுத்துக்களைப்பெற்று வரும்?
அ.அரை ஆ.ஒன்று இ.இரண்டு ஈ.ஒன்றரை
விடை : இ.இரண்டு

9. குற்றியலுகரம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது எது?

அ.குறமை + இயல்+ உகரம்
ஆ.குறுமை + இயல்+உகரம்
இ.குறம் + இயல் +உகரம்
ஈ.குறமை + இயல் +லுகரம்
விடை:ஆ.குறுமை +இயல்+உகரம்

10. ஆய்தத்தொடர்க் குற்றியலுகரத்திற்கு ஒரு எடுத்துக்காட்டுத்தருக.
அ.மண்ணு ஆ.எ்.கு இ.ஒன்பது ஈ.செய்து
விடை:ஆ.எ்.கு